# SNS academy

an International CBSE Finger Print School
Coimbatore

**Name :** **Date :**

**Grade :** **Worksheet** **Submission Date :**

**Subject : Tamil** **Parent's sign :**

## எங்கள் தமிழ்

**அ) கீழ்க்காணும் செய்யுளைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள் பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது
கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே.

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
   அ) மலைக்கள்ளன் ஆ) சங்கே முழங்கு
   இ) என் கதை ஈ) நாமக்கல் கவிஞர் பாடல்கள்
2. இப்பாடலை இயற்றியவர் யார்?
   அ) பெருஞ்சித்திரனார் ஆ) சுரதா
   இ) வெ. இராமலிங்கனார் ஈ) பாரதிதாசன்
3. இப்பாட்டின் தலைப்பு யாது?
   அ) இன்பத்தமிழ் ஆ) எங்கள் தமிழ்
   இ) செந்தமிழ் ஈ) பைந்தமிழ்
4. தமிழர் பொருள் பெற என்ன செய்ய மாட்டார்?

அ) யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்

ஆ) யாரிடமும் பேசமாட்டார்

இ) யாரிடமும் பொய் பேசமாட்டார்

ஈ) யாரிடமும் பொருள் கேட்கமாட்டார்

5. எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ உதவுவது எது?

அ) பகையும் நட்பும் ஆ) போரும் படையும்

இ) அன்பும் அறமும் ஈ) பணமும் பொருளும்

6. காந்தியக் கவிஞர் என்று அழைக்கப்படுபவர் ______________.

அ) உவமைக் கவிஞர் சுரதா

ஆ) கவிஞாயிறு தாராபாரதி

இ) நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்

ஈ) புரட்சிக்கவி பாரதிதாசன்

7. அறிவைத் தருகின்ற நெறி ____________.

அ) அருள் ஆ) அன்பு இ) அறம் ஈ) ஈகை

8. விரதம் என்பதன் பொருள் _________________.

அ) கொல்லாமை ஆ) குறிக்கோள் இ) நோன்பு ஈ) ஊக்கம்

9. கத்தியின்றி இரத்தமின்றி எனத் தொடங்கும் பாடலை எழுதியவர் ________________________.

அ) காந்தியடிகள்

ஆ) கவிஞர் வெ. இராமலிங்கனார்

இ) கவிமணி தேசிய விநாயகனார்

ஈ) மகாகவி பாரதியார்

**II) பொருள் எழுதுக.**

1. ஊக்கிவிடும் -
2. குறி -
3. விரதம் -
4. பொழிகிற -

**III) சரியான விடையைக் கண்டறி.**

1.“நெறி” என்னும் சொல்லின் பொருள்

அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்

2. “குரலாகும்” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) குரல் + யாகும் ஆ) குரல் + ஆகும்

இ) கு + லாகும் ஈ) குர + ஆகும்

3. வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) வான்ஒலி ஆ) வானொலி

இ) வாவொலி ஈ) வானெலி

**IV) நிரப்புக.**

1. எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ _______________, ___________ உதவும்.
2. நம் ______________ மொழி அனைவரிடத்தும் அன்பையும், அறத்தையும் தூண்டும்.
3. எங்கள் தமிழ் மொழி __________________ போன்ற மொழி ஆகும்.
4. தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர் ________________.
5. காந்தியக் கவிஞர் என்று அழைக்கப்படுபவர் ________________.
6. உலக மொழிகளில் தொன்மையான மொழி ___________________.

**இ) எங்கள் தமிழ் என்ற பாடலுக்கேற்ப மன வரைபடம் வரைக.**